2015 செப்டம்பர் 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்த அறிவிப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் மாவட்டங்களில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யவும், அதிகரித்து வரும் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவும், மாசற்ற, சுற்றுச்சூழல் மேம்பட்ட, முன்னோடியான எதிர்கால தமிழகத்தை உருவாக்கவும், திடக் கழிவுகளை அறிவியல் சார் முறையில் அகற்றவும், மேலாண்மை செய்திடவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கு சமூகப் பொருளாதார அதிகாரம் வழங்கிடவும், அதன்மூலம் வறுமை ஒழிக்கும் நோக்கத்துடனும், சுய உதவிக் குழுக்களை எனது தலைமையிலான அரசு 1991 ஆம் ஆண்டு உருவாக்கியது. மேலும், ஏழையெளிய நலிவுற்ற மக்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக 2005 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு உலக வங்கி நிதி உதவியுடன்கூடிய தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டத்தையும் துவக்கி வைத்தது. அதன் பயனாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் மாபெரும் சக்தியாய் உருவெடுத்து, இன்று 6.08 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 92 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின்கீழ் 20 முதல் 25 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உள்ளனர். சுய உதவிக் குழுவில் ஊக்குநராகச் செயல்பட்ட அனுபவமிக்க உறுப்பினர்களே சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் புதிய சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்கும், பயிற்றுவிப்பதற்கும் துணை புரிந்து வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு அவர்களுக்குள் கொடுத்துக் கொள்ளும் உட்கடன் விவரம், கடனை மீளச் செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது. விவரங்களைப் பதிவேடுகளில் பதிவு செய்யவும், அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி, கணினிமயமாக்கப்பட்ட கைபேசிகள் வழங்கப்படும் 'அம்மா கைபேசி திட்டம்' என்ற புதிய திட்டம் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதற்கட்டமாக 20 ஆயிரம் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்மா கைபேசிகளை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வேளாண் உற்பத்தித் திட்டங்கள், நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம், மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்தை ஊக்குவித்தல், சென்னையில் ஒருங்கிணைந்த மேம்பாலங்கள், சோழிங்கநல்லூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசிகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையினுடைய பெருமையைச் சொல்ல வந்த வள்ளுவப் பெருந்தகை,

> "உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
> தொழுதுஉண்டு பின்செல் பவர்"

என்றார். எனது தொழில் எது என்று கேட்டால், நான் விவசாயி என்று சொல்வதைப் பெருமையோடு சொல்லிக்கொள்வேன் என்று சொன்ன நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வேளாண்மை, குடிநீர், துப்புரவு, சுய உதவிக் குழு என பல்வேறு துறைகளுக்கு பல நூறு கோடி ரூபாய்களை, பல்லாயிரக்கணக்கான